**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2025ம் வருடம் டிசம்பர் மாதம் 01ம் நாள் திங்கட்கிழமை

**இடைக்கால மனு எண்.6/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.25/2021**

1. M.முருகன்
2. சுப்பையா ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

..எதிர்..

I. பூமாதேவி ..எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 18.11.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. நாகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட அசல் உயில் ஆவணத்தை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்திரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 3 மற்றும் பிரிவு 151 சிபிசி-யின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் இந்த மனுதாரர்கள் தரப்பில் 15 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அழகு என்பவர் 1ம் மனுதாரருக்கு எழுதி வைத்த உயில் பற்றி ஏற்கனவே எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயிலின் சான்றிட்ட நகல் இந்த மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது தான் மேற்படி உயிலின் அசல் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் மேற்படி உயில் இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணம் ஆகும் என்றும் எனவே மேற்படி ஆவணத்தை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

மனுவில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது என்றும் மனு அபிடவிட்டில் "அசல் உயில் எதிர்மனுதாரரிடம் மேற்படி அழகு கோனார் இறப்பதற்கு முன்பு ஒப்படைத்த ஆவணங்களுடன் கலந்து கண்டுபிடிக்க இயலாமல் போயிருந்ததை தற்போது தேடிப்பார்த்து கிடைக்கப்பெற்றது என்று கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கபட்டவை என்றும் அசல் வழக்கு தாக்கல் செய்து 4 வருட காலமான பின்பு மனுதாரர் போலியான சங்கதிகளை கூறி ஆவணங்களை தாக்கல் செய்ய முயற்சித்து வருகிறார் என்றும் மேற்படி உயில் ஆவணம் எவ்வாறு தற்போது அதுவும் வழக்கு தாக்கல் செய்து 4 வருடங்கள் ஆன பின்பு கிடைத்தது என்பது பற்றிய விவரத்தை எடுத்துரைக்காமல் இம்மனுவை மனுதாரர் தாக்கல்

செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும் மேற்படி ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இந்த மனு தள்ளுபடிக்கு உரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அழகு என்பவர் 1வது மனுதாரருக்கு எழுதி வைத்த உயிலின் அசல் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் மேற்படி உயில் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணம் என்றும் எனவே மேற்படி ஆவணத்தை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து உத்திரவிடவேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தற்போது தான் உயில் ஆவணம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக மனுவில் கூறப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணம் மோசடியாக வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி உயில் ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் மேற்படி ஆவணம் ஏற்புடையதா இல்லையா என்பதை அசல் வழக்கில் முழு விசாரணைக்கு பின்பு முடிவு காண வாய்ப்புள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும் மேற்படி ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் எனவே உரிய காலத்தில் தாக்கல் செய்யாத காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்திரவிட வேண்டியது அவசியமானதாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த மனுவினை

அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.